
## இந்தியாவில்

# பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சிறுமிகளுக்குக் கூட பாதுகாப்பு இல்லை!

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு!



புதுடெல்லி, ஏப். 26- இந்தியாவில் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சிறுமிகளுக்குக் கூட பாதுகாப்பு இல்லை என, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்

காங்கிரஸ் மூத்தத் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேசத்தின் காசிபூரில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளதை குறிப்பிட்டுள்ளார்.

அதனைத்தொடர்ந்து, முதல் தகவல் அறிக்கையைக் கூடப் பதிவு செய்வதை தடுக்கும் நோக்கில் அந்த சிறுமியின் குடும்பத்தினர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு, வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்.

ஹத்ராஸ், கதுவா, உன்னாவை தொடர்ந்து இன்று காசிபூர் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக ராகுல் வேதனையுடன் கூறியுள்ளார். இது மீண்டும், மீண்டும் நிகழும் ஒரு நிகழ்வு. மணிப்பூரின் ஒரு பெண், நீதிக்காக காத்திருக்கும் போதே தன் கடைசி மூச்சைவிட்டார். ஒவ்வொரு முறையும் குற்றவாளிக்கு பாதுகாப்பு கிடைக்கிறது,

ஆனால் பாதிக்கப் பட்டவர் துன்புறுத்தலை எதிர்கொள்கிறார். தங்கள் மகளுக்காக ஒரு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யக்கூட பெற்றோர்கள் கெஞ்ச வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் ஒரு மாநிலத்தில் ஆட்சியில் இருக்கும் அரசுக்கு பதவியில் நீடிப்பதற்கு சிறிதும் தார்மீக உரிமையில்லை என்று சாடியுள்ளார்.

குற்றவாளிகளான உத்தரப்பிரதேச காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். தங்கள் ஆட்சியில் எங்கள் மகள்கள் ஏன் இவ்வளவு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என்பது குறித்தும், இந்த பாலியல் வன்கொடுமை குறித்தும் பிரதமர் மோடி, உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆகிய இருவரும் பதில் சொல்லியே ஆக வேண்டும் என ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# எந்த வாக்குச் சாவடியிலும் மறுதேர்தல் கிடையாது!

## இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி,ஏப்.26– பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்கள், 2026. தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் (முதற்கட்டம்) படிவம் 17A சரிபார்ப்பு நிறைவடைந்தது

1. வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தவும், வாக்குச்சாவடிகளில் ஏதேனும் முறைகேடுகள் நடந்திருந்தால் அதைக் கண்டறிந்து, தேவைப்பட்டால் மறுவாக்குப்பதிவுக்குப் பரிந்துரைக்கவும், படிவம் 17A (வாக்காளர் வருகைப் பதிவேடு) மற்றும் வாக்குப்பதிவு நாளன்று பயன்படுத்தப்பட்ட பிற தேர்தல் ஆவணங்களை வாக்குப்பதிவிற்குப் பிந்தைய சரிபார்ப்பு குறித்த ஒருங்கிணைந்த அறிவுறுத்தல்களை இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) வெளியிட்டுள்ளது.

2. அதன்படி, ஏப்ரல் 24, 2026 அன்று, மேற்கு வங்கத்தில் (முதற்கட்டம்) வாக்குப்பதிவு நடைபெற்ற அனைத்து 152 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் (ACs), பொதுப் பார்வையாளர்கள் (GO) மற்றும் 600க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலை யில் தேர்தல் நடத்தும் அலுவலர்களால் (RO) ஆவணங்கள் சரிபார்ப்பு சுமூகமாக நடத்தப்பட்டது.

3. மேற்கு வங்கப் பொதுத்தேர்தலின் முதற்கட்டத்தில், மொத்தம் உள்ள 1,478 வேட்பாளர்களுக்கும் சரிபார்ப்பு செயல்முறையில் பங்கேற்பதற்கான தேதி, நேரம் மற்றும் இடம் குறித்து முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டது. ஏப்ரல் 23, 2023 அன்று வாக்குப்பதிவு நடைபெற்ற 44,376 வாக்குச்சாவடிகளில், சரிபார்ப்பிற்குப் பிறகு எந்த ஒரு மறு வாக்குப்பதிவும் பரிந்துரைக்கப்படவில்லை.

4. இதேபோல், தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு நடைபெற்ற அனைத்து 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும், ஏப்ரல் 24, 2026 அன்று பொதுப் பார்வையாளர்கள் மற்றும் 1,825 வேட்பாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதி கள் முன்னிலையில் தேர்தல் நடத்தும் அலுவலர்களால் ஆவணங்கள் சரிபார்ப்பு சுமூகமாக நடத்தப்பட்டது.

5. தமிழகப் பொதுத்தேர்தலில், மொத்தம் உள்ள 4,023 வேட்பாளர்களுக்கும் சரிபார்ப்பு செயல்முறையில் பங்கேற்பதற்கான விவரங்கள் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டன. ஏப்ரல் 23 அன்று வாக்குப்பதிவு நடைபெற்ற 75,064 வாக்குச்சாவடிகளில், சரிபார்ப்பிற்குப் பிறகு எந்த ஒரு மறு வாக்குப்பதிவும் பரிந்துரைக்கப்படவில்லை.

6. இரு மாநிலங்களிலும் இந்த முழு செயல்முறையும் காணொலிப் பதிவு (videographed) செய்யப்பட்டது. சரிபார்ப்பிற்குப் பிறகு, படிவம் 17A மற்றும் தொடர்புடைய பொருட்கள் அனைத்தும் தேர்தல் நடத்தும் அலுவலரின் (RO) முத்திரையிடப்பட்டு மீண்டும் சீல் வைக்கப்பட்டன.

7. ஏப்ரல் 23, 2026 அன்று வாக்குப்பதிவு முடிந்ததும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் (EVM VVPATs) பொதுப் பார்வையாளர்கள் மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு, பாதுகாப்பு அறைகளில் (Strong Rooms) பத்திரமாக வைக்கப்பட்டுள்ளன.

8. வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளுக்கு இரட்டைப் பூட்டு முறை, 24 மணி நேரமும் சுழற்சி முறையில் இரண்டு அடுக்கு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு அறையின் கதவுகள்/தாழ்வாரங்களில் சிசிடிவி (CCTV) கண்காணிப்பு உள்ளிட்ட விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

9. தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (ROs) பாதுகாப்பு அறைகளுக்கு ஒரு நாளில் இருமுறை நேரில் சென்று ஏற்பாடுகளைச் சரிபார்க்க உத்தரவிடப்பட்டுள்ளது. மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் (DEOs) தலைமையகத்தில் உள்ள பாதுகாப்பு அறைகளுக்குத் தினமும் ஒருமுறையும், தலைமையகத்திற்கு வெளியே உள்ள அறைகளுக்கு 34 நாட்களுக்கு ஒருமுறை யும் நேரில் சென்று ஆய்வு செய்வார்கள்.

10. பாதுகாப்பு அறைகளைக் கண்காணிப்பதற்காக, அந்த அறைகள் அமைந்துள்ள கட்டிட வளாகத்தில் வேட்பாளர்களின் பிரதிநிதிகள் தற்காலிக முகாம்களை அமைத்துத் தொடர்ந்து கண்காணிக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# ஏற்காடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மலைக்கிராமத்தில் 100% வாக்குப்பதிவு!

சேலம்,ஏப்.26- சேலம் மாவட்டம் ஏற்காடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொம்புதூக்கி மலைக்கிராமத்தில் மொத்தமுள்ள 301 வாக்காளர்களும் வாக்களித்து, 100 சதவீத வாக்குப்பதிவு நிகழ்த்தியுள்ளனர். தமிழக சட்டமன்றத் தேர்தலுக்காக வாக்குப்பதிவு 23.4.2026 - அன்று ஒரே கட்டமாக நடந்து முடிந்தது. மாநிலம் முழுவதும் 85.16 சதவீத வாக்குகள் பதிவானது. சேலம் மாவட்டத்தை பொறுத்த வரை 11 சட்டமன்ற தொகுதிகளில் 90.74 சதவீதம் வாக்குப்பதிவு நடந்தது. இது கடந்த 2021ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை காட்டிலும் 7.94 சதவீதம் அதிகம்.

இதனிடையே, சேலம் மாவட்ட அளவில் மட்டுமின்றி, மாநில அளவிலும் வீரபாண்டி சட்டமன்ற தொகுதியில் 93.4 சதவீதம் வாக்குகள் பதிவாகி முதலிடம் பிடித்துள்ளது. சேலம் மாவட்டத்தில் குறைந்த பட்சமாக சேலம் வடக்கு தொகுதியில் 87.4 சதவீத வாக்குகள் பதிவானது. இதில் சுவாரஸ்யமாக ஏற்காடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொம்புதூக்கி மலைக்கிராமத்தில் 100 சதவீத வாக்கு பதிவாகியுள்ளது. அந்த வாக்குச் சாவடியைச் சேர்ந்த மொத்தமுள்ள 301 வாக்கா ளர்களும் வாக்களித்து, 100 சதவீத வாக்குப்பதிவு சாதனையை நிகழ்த்தி யுள்ளனர். ஏற்காடு சட்டமன்றத் தொகுதியை பொறுத்தவரை, 1,33,706 ஆண் வாக்காளர்கள், 1,39,105 பெண் வாக்காளர்கள், 18 திருநங்கைகள் உள்பட மொத்தம் 2,72,829 வாக்காளர்கள் உள்ளனர்.

இதில் 23.4.2026 அன்று நடந்த தேர்தலில் 2,51,080 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். ஏற்காடு தொகுதியின் வாக்குப்பதிவு 92.03 சதவீதம். இதில், ஏற்காடு மலைக்கிராமத்தில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளும் ஏற்காடு தாலுகாவிற்குள் அமைகிறது. அதன்படி ஏற்காடு தாலுகாவில் உள்ள 49 வாக்குச்சாவடிகளில் 30,347 பேர் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், 94 சதவீதம் பேர், அதாவது 28,478 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். அதிகபட்சமாக ஏற்காடு கொம்புதூக்கி மலைக்கிராமத்தில் அரசு பழங்குடியினர் உண்டு, உறைவிடப்பள்ளி வாக்குச்சாவடியில் 160 ஆண்கள், 141 பெண்கள் என மொத்தம் 301 பேர் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வாக்குப்பதிவு நிறைவடையும் நேரத்தில், அந்த வாக்குச் சாவடியில் உள்ள அனைத்து வாக்குகளும் பதிவானது. ஒரே கிராமத்தைச் சேர்ந்த 301 வாக்காளர்களும் தவறாமல் வந்து தங்களது ஜனநாயக கடமையாற்றியுள்ளனர். இதனால் அப்பகுதியினருக்கு தேர்தல் அதிகாரிகள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

# பஞ்சாப்பில் 7 எம்.பி.க்கள் பா.ஜ.க.வில் இணைப்பு!

## முதலமைச்சர் பகவந்த்மான் சிங் குற்றச்சாட்டு!

அமிர்தசரஸ், ஏப். 26- சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் கட்சியை தொடர்ந்து ஆம் ஆத்மி கட்சியையும் பா.ஜ.க. உடைத்துள்ளது. ஆம் ஆத்மியிலிருந்து விலகிய ராகவ் சத்தா உள்ளிட்ட 7 மாநிலங்களவை எம்.பிக்களில் 3 பேர் பா.ஜ.க.வில் இணைந்துள்ளனர்.

மகாராஷ்ட்ராவில் சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் கட்சியை இரண்டாக உடைத்தது பா.ஜ.க. அதன்படி, சிவசேனா கட்சியிலிருந்து மூத்த தலைவர் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் எம்.எல்.ஏக்களை வெளிவர செய்து அவரை முதலமைச்சர் ஆக்கியது. இதனால் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே முதலமைச்சர் பதவியை இழந்தார். இதேபோன்று, சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சியையும் இரண்டாக பிளந்த பா.ஜ.க., அஜித்பவாரை துணை முதலமைச்சராக்கியது. அந்த வழியில் தற்போது டெல்லி முன்னாள் முதலமைச்சர் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சியையும் பா.ஜ.க. உடைத்துள்ளது.

ஆம் ஆத்மியின் இளம் தலைவர்களில் ஒருவரான ராகவ் சத்தாவை முதலில் வளைத்து போட்ட பா.ஜ.க. தற்போது, அந்த கட்சியின் 10 மாநிலங்களவை எம்.பிக்களில் 7 பேரை தங்கள் பக்கம் இழுத்துள்ளது. இவர்களில் ராகவ் சத்தா, அசோக் மிட்டல் மற்றும் சந்தீப் பதக் ஆகியோர் பா.ஜ.க.வில் இணைந்துள்ளனர். ஹர்பஜன் சிங், ராஜேந்திர குப்தா, விக்ரம் சக்னி, சுவாதி மாலிவால் ஆகிய 4 எம்.பிக்கள் விரைவில் பா.ஜ.க.வில் சேர உள்ளனர்.

பா.ஜ.க.வில் இணைந்துள்ள ஆம் ஆத்மி எம்.பிக்களை தகுதிநீக்கம் செய்யுமாறு மாநிலங்களவை தலைவருக்கு அக்கட்சி சார்பில் கடிதம் எழுதப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆம் ஆத்மி எம்.பிக்களை விலைக்கு வாங்கியுள்ளதன் மூலம், பஞ்சாப் மக்களுக்கு பா.ஜ.க. துரோகம் இழைத்துவிட்டதாக அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியுள்ளார். சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ், சிவசேனா கட்சிகளிடம் பயன்படுத்தப்பட்ட அதே வாஷிங் மெஷின் பஞ்சாப்பிலும் பயன்படுத்தப்பட்டுள்ளதாக, பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த மான் சிங் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மக்கள் இந்த ஏழு எம்.பிக்களின் பெயரை நினைவில் வைத்து கொள்ளவேண்டும், அவர்களை பஞ்சாப் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள் என்று கூறினார்.

டெல்லியை தொடர்ந்து ஆம் ஆத்மி ஆட்சியை பிடித்த மாநிலமான பஞ்சாப்பில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில், ஆம் ஆத்மியின் 7 எம்.பிக்களை விலைக்கு வாங்கியுள்ளதன் மூலம் பஞ்சாப்பிலும் கொல்லைப்புறமாக ஆட்சியை பிடிக்க பா.ஜ.க. சதிதிட்டத்தீட்டியுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# இந்தியப் பொருளாதாரத்தில் கலவையான நெருக்கடி!

## ரிசர்வ் வங்கி தகவல்!




புதுடெல்லி, ஏப். 26- மேற்கு ஆசிய நெருக்கடியின் விளைவாக இந்தியப் பொருளாதா ரம் கலவையான சமிக்ஞைகளை (கலவையான நெருக்கடி) வழங்கி வருவதாக இந்திய ரிசர்வ் வங்கி தனது சமீபத்திய 'பொருளாதார நிலை' அறிக்கையில் குறிப் பிட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த அறிக் கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, "மேற்கு ஆசியப் போர்ச் சூழலால் தேவை மற்றும் விநியோகச் சங்கிலியில் பாதிப்புகள் ஏற் பட்டாலும், இந்தியாவின் வலுவான பொருளாதார அடிப்படைகள் இந்த அதிர்ச்சிகளைத் தாங்கிக் கொள்ளும் நிலைமை உள்ளது.

ஆனால் சில துறைகளில் தேவை வலுவாக இருந்தாலும், மற்ற வற்றில் தேக்க நிலை காணப்படு கிறது. விநியோகக் குறைபாடுகள் வருங்காலத்தில் 'தேக்க நிலை அதிர்ச்சியாக' மாற வாய்ப்புள்ள தால், இதுகுறித்துத் தொடர்ச்சி யான கண்காணிப்பு அவசியம்.

குறைவு சரிவு அதே போல, உற்பத்தித் துறைக்கான பிஎம்ஐ (PMI Purchasing Managers Index) குறியீடு விரிவாக்க மண்டலத்தில் இருந்தாலும், கடந்த 4 ஆண்டு களில் இல்லாத குறைந்த அளவை எட்டியுள்ளது. சேவைத் துறை பிஎம்ஐ 14 மாதங்களில் இல்லாத அளவிற்குச் சரிந்துள்ளது. உரம், கச்சா எண்ணெய், நிலக்கரி மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் உற்பத்தி குறைந்ததால், 8 முக்கி யத் தொழில்களின் குறியீடு 19 மாதங்களில் இல்லாத சரிவைக் கண்டுள்ளது.

விமான எரிபொருள் தேவை கடுமையாகக் குறைந்துள்ளது மற்றும் விமானப் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது அந்த துறையில் பாதிப்பை ஏற்படுத்தி யுள்ளது. இதனால் வான்வழிப் பயணிகள் போக்குவரத்திலும் மந்த நிலை மற்றும் துறைமுகச் சரக்கு கையாளுதலில் நெருக்கடி நீடிக்கிறது. மேற்கு ஆசியப் போர் காரணமாக விநியோகச் சங்கிலி யில் பல சிக்கல்கள் இருந்தாலும், உள்நாட்டுச் சந்தையில் அதன் தாக்கம் இன்னும் முழுமையாக எதிரொலிக்கவில்லை.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர்நிறுத்த முயற்சி உலகப் பொருளாதாரத்திற்குச் சற்று நிம்மதியை அளித்துள்ளது. இந்தியாவின் வலுவான மேக்ரோ பொருளாதார அடிப்படைகள் இத்தகைய சவால்களை எதிர் கொள்ள உதவும்" என ரிசர்வ் வங்கி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## சென்னையில்

# 300 முக்கியச் சாலைகளில் அதி நவீன வழிகாட்டிப் பலகைகள்!

சென்னை, ஏப். 26- சென்னை மாநகராட்சியின் 300 முக்கியச் சாலைகளில் அதிநவீன வழிகாட்டிப் பலகைகள் அமைக்கப்பட உள்ளன.

சென்னை மாநகரின் முக்கியச் சாலைகளில் போக்குவரத்தைச் சீரமைக்கவும், விபத்துகளைக் குறைக்கவும் பெருநகர சென்னை மாநகராட்சி புதிய திட்டத்தை முன்னெடுத்துள்ளது. தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாகனப் பெருக்கத்தால், போக்குவரத்து நெரிசலும் விபத்துகளும் பெரும் சவாலாக மாறியுள்ளன.

இதனைச் சரிசெய்ய, சென்னையின் 300 முக்கியச் சாலைகளில் சுமார் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதிநவீன வழிகாட்டிப் பலகைகளை அமைக்க மாநகராட்சி திட்ட மிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த வழிகாட்டி பலகைகளில் எழுத்துக்களை விட எளிதில் புரியக்கூடிய வகையில் படங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது. தமிழ் தெரியாதவர்கள் அல்லது வெளிமாநிலத்தவர்கள் கூட எளிதாகத் சாலைகளை அறிந்து கொள்ள முடியும்.

விபத்து பகுதிகள், பள்ளிக் குழந்தைகள் கடக்கும் இடங்கள், வேகத்தடைகள் ஆகியவற்றைப் படம் மூலம் முன்கூட்டியே எச்சரிக்கும் வசதி மற்றும் இரவு நேரங்களில் ஓட்டுநர்களுக்குத் தெளிவாகத் தெரியும் வகையில் ஒளிக்கற்றை பட்டைகளுடன் இந்தப் பலகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக, போக்குவரத்து நெரிசல் அதிகம் காணப்படும் நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், அண்ணா நகர், அண்ணா சாலை, வேளச்சேரி மற்றும் பெருங்குடி ஆகிய பகுதிகளில் இந்தப் புதிய பலகைகள் நிறுவப்பட உள்ளன.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அறந்தாங்கி அம்பிகாபதி

ஏப்ரல் 26 (2008)



புதுக்கோட்டை மாவட்ட துணைச் செயலாளராகவும் – மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

பூவனூர் ஊராட்சி மன்றத் தலைவராக பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

நெருக்கடி கால 'மிசா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.


## ஈரான் உடனான அமைதிப் பேச்சு தோல்வி!

# ஹார்முஸ் நீரிணையில் பதற்றம் அதிகரிப்பு!

வாஷிங்டன், ஏப்.26- ஈரான் உடனான அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் ஹார்முஸ் ஜலசந்தியில் தாக்குதல் நடத்த அமெரிக்க ராணுவம் திட்டமிட்டு உள்ளது.

கடந்த பிப்ரவரி 28ம் தேதி முதல் அமெரிக்கா, ஈரான் இடையே போர் நடைபெற்று வந்தது. கடந்த 8ம் தேதி இருதரப்பு இடையே போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டது.

இந்த இரு வார போர் நிறுத்தம் கடந்த 23ம் தேதியுடன் நிறைவடைந்தது. அன்றைய தினம் காலவரையின்றி போர் நிறுத்தத்தை நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார்.

போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் ராணுவம் மூடியுள்ளது. இதேபோல இந்த ஜலசந்தியின் இருபுறமும் அமெரிக்க போர்க்கப்பல்கள் நிறுத்தப்பட்டு உள்ளன. இந்த சூழலில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், "காலம் கடந்து சென்று கொண்டிருக்கிறது. ஈரான் தரப்பு விரைந்து முடிவு எடுக்க வேண்டும்" என்று எச்சரித்துள்ளார்.

ஈரான் உச்ச தலைவர் மோஜ் தபா காமேனி நேற்று வெளியிட்ட அறிக்கையில், "ஈரான் தேசப்பற்றாளர்களின் ஒற்றுமையால் எதிரிகளின் கூட்டணியில் விரிசல் ஏற்பட்டு இருக்கிறது. ஈரான் மக்களின் மனதில் அச்சத்தை விதைக்க எதிரி நாடு முயற்சி செய்கிறது. இதற்கு இடம் கொடுக்கக் கூடாது" என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்கா, ஈரான் இடையே அமைதி ஒப்பந்தத்தை இறுதி செய்ய பாகிஸ்தான், துருக்கி, எகிப்து உள்ளிட்ட நாடுகள் தீவிர முயற்சி செய்து வருகின்றன. இது தொடர்பாக அமெரிக்க ராணுவ வட்டாரங்கள் கூறியதாவது: சீனாவில் இருந்து ஈரானுக்கு ஆயுதங்கள், வெடிபொருட்கள் கொண்டு செல்வதை தடுக்க ஹார்முஸ் ஜலசந்தி பகுதியை முழுமையாக முடக்கி உள்ளோம்.

ஈரானின் சரக்கு கப்பல்களை அடுத்தடுத்து கைப்பற்றி வருகிறோம். இதனால் ராணுவ, பொருளாதார ரீதியிலான நெருக்கடியை சமாளிக்க முடியாமல் அமைதி ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திடும் என்று எதிர்பார்க்கிறோம். ஒருவேளை அமைதி பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் ஹார்முஸ் ஜலசந்தியில் மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும். தற்போது 19 போர்க்கப்பல்கள் மத்திய கிழக்கில் முகாமிட்டு உள்ளன.

மேலும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களில் சுமார் 300க்கும் மேற்பட்ட போர் விமானங்கள் உள்ளன. ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் வீசப்பட்டு உள்ள கண்ணிவெடிகளை படிப்படியாக அகற்றி வருகிறோம். மேலும் கண்ணிவெடிகளை வீசும் ஈரான் படகுகளை சுட்டு வீழ்த்த அதிபர் ட்ரம்ப் உத்தரவிட்டு உள்ளார்.

இவ்வாறு அமெரிக்க ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.